# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,927 — 1932 ம் ஹு ஆனிமீ 2 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

அரசாட்சியாரின் விளம்பரம்.

### நொத்தாரிஸ் பிரதம பரீட்சைக்குரிய அறிவித்தல்.

சிங்களத்திலும் தமிழிலும் பிரசித்த நொத்தாரிமாராகும் பொருட்டு அதற்கென்று நிருபிக்கப்பட்ட பொருத்தனைகளுக் குடன்பட்டு வேலைபழக விரும்புவோரைப் பரீட்சித்தற்காய் விதிக்கப்பட்ட பிரதம பரீட்சை 1932 ம் ஆண்டு மார்கழி மீ 5 ந் திகதியிலும் அதனை அடுத்துவரும் தினங்களிலும் இலங்கை வித்தியாகர்த்தர் அவர்களால் கொழும்பில் நடத்தப்படும்.

2 வது.—குறித்த பரீட்சை கொடுக்கும் கருத்துடையர் ஒவ்வொருவரும் தம்மைப் பரீட்சைக்குச் சேர்க்கும் பொருட்டு விண்ணப்பஞ்செய்ய மூன்று மாசத்திற்கு முன்னரே தாம் குடியிருக்கும் மாகாண அரசாட்சி ஏஜென்று அவர்களிடம் அக்கருத்தை அறிவித்துவைத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது நொத்தாரித் தொழில் புரியத் தாம் தெரிந்துகொண்ட பாஷை யாது, ஊர்ப்பகுதி யாது என்பவற்றை அவ்வறிவித்தலில் சுட்டிக்காட்டல்வேண்டும். அது முதலாகப் பூரணமாக மூன்று மாதம் கழிந்தபின்பே பரீட்சைக்குச் சேர்க்கும்படி விண்ணப்பம் அனுப்பல் வேண்டும்.

3 வது.—இவ்விண்ணப்பப்பத்திரம் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தோடு அணைக்கப்பட்டுள்ள இரண்டாமிலக்க அட்டவணையின் (Schedule II.) A மாதிரியாய் அங்கிலேய பாஷையில் எழுதப்பட்டுப் பதிவுகாரியகர்த்தர் அவர்கள் மேல்விலாசத்திற் கனுப்பப்படல் வேண்டும்.

அதில்—

(1) குடியிருக்கும் அவர் ஊரின் பெயர்யாது ?

(2) அவரின் வயது எத்தனை ?

(3) வேலைபழகும்பொருட்டு அவர் சேவிக்கக் கருதியிருக்கும் " அட்வக்கேற் " அல்லது " புறக்றர் " எனும் நியாயதுரந்தரரின் பெயர் யாது ?

(4) நொத்தாரித் தொழில்புரியத் தெரிந்துகொண்ட ஊர்ப்பகுதி யாது ; பாஷையாது ? என்ற இவை முதலிய விபரங்களை அடக்கிக்காட்டல் வேண்டும்.

4 வது.—இவ் விண்ணப்பப்பத்திரம் Ceylon Postage and Revenue என்னும் சொற்கள் அச்சிடப்பட்டுள்ள பத்து ரூபாய் முத்திரையைக்கொண்டும் அம்முத்திரை அழிக்கப்பட்டும் இருத்தல் வேண்டும். மேலும், அரசாட்சி ஏஜென்று அவர்களுக் கறிவித்தல் கொடுத்ததன்பின் அவர் அதை ஏற்றுக்கொண்டோம் எனவிடையா யனுப்பின கடிதத்தையும், நன்னடை வித்தியாதிறமைகளைக் குறித்துச் சாட்சி பகரும் சிபாரிசுப்பத்திரங்களையும் இவ்விண்ணப்பப் பத்திரத்தோடு அணைத்தனுப்பல் வேண்டும். இதற்குமுன் வேலையா யிருந்தவராயின் கடைசியாய்த் தாம் சேவித்தவரிடமிருந்தும் சிபாரிசுப் பத்திரம்வாங்கி அணைத்தனுப்பல் வேண்டும். அனுப்பும் நற்சாட்சிப் பத்திரங்களில் பலவுள அன்றுமுதல் மூன்று மாசத்துக்கு மேற்படாத தவணைக்கிடையில் எழுதப்பட்டுள்ள நற்சாட்சிப்பத்திரம் ஒன்றேனும் அணைத்தனுப்பல் இன்றியமையா ஆவசியகம் ; தமது வயது எத்தனையென்று குறிக்கும் அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பவேண்டும்.

5 வது.—எந்த எந்தப்பாஷையில் நொத்தாரித் தொழில் புரிய ஒருவர் கருத்துடையராயிருக்கின்றனரோ அந்த அந்தப் பாஷையில் ஒவ்வொரு விண்ணப்பப்பிரதியை, தமது சொந்தக்கையெழுத்தில் எழுதி அங்கிலேய பாஷையில் எழுதியனுப்பும் விண்ணப்பப்பத்திரத்தோடு சேர்த்தனுப்பல் வேண்டும்.

6 வது.—விண்ணப்பப் பத்திரங்கள் 1932 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 ந் தேதி 2 மணிக்குப் பிந்தாமல் இவ்வேலைத்தலத்திற்கு வந்துசேரும்படி யனுப்பிவைத்தல் வேண்டும்.

7 வது.—விண்ணப்பப்பத்திரம் அனுப்பியவர்கள் எல்லோரும், பரீட்சைக்குப் போகவிருப்பவர்கள் அவர்தானென நிச்சயப்படுத்தும் பொருட்டும் பரீட்சைக்குச் செல்லும் வண்ணம் உத்தரவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும் இவ்வேலைத்தலத்திற்கு 1932 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ந் திகதி துவக்கம் மார்கழி மாதம் 2 ந் திகதி வரையிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையிலும், மார்கழி மாதம் 3 ந் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையிலும் உள்ள எந்நாட்களிலும் வந்து தோற்றப்படல் வேண்டுமென்றறிக.

8 வது.—பரீட்சைக்குரிய கல்வி விஷயங்களும் அதற்குக் கொடுக்கப்படும் (மாக்ஸ்) புள்ளிகளும் நேர ஒழுங்குகளும் இதனோ டணைக்கப்பட்டுள்ள அட்டவணையிற் காணப்படும்.

9 வது " ஓறியென்றல் ஸ்ரடீஸ் சொசையெற்றி " Oriental Studies Society) யாரால் வைக்கப்படும் இடைப் பரீக்ஷையில் அல்லது கடைப் பரீக்ஷையிற் சித்தியடைந்தோரும் அல்லது லண்டன் சர்வ கலாசாலையின் அல்லது

சென்னைச் சர்வ கலாசாலையின் B. A. பரீக்ஷையில் சிங்களம் அல்லது தமிழ்ப் பாஷைகளிற் சித்தியடைந்தோரும் வாசகஞ் சொல்ல எழுதல், வாசகந் தொடுத்தல், இலக்கணம், வாசினை ஆகிய விஷயங்களுக்குரிய சோதனையிலிருந்து விலகிக்கொள்ளலாம். அப்படி விலகிக்கொள்ள விரும்புவோர் மேற் சொல்லிய சோதனைகளில் தாம் சித்திடைந்ததைக் காட்டும் அத்தாட்சிப்பத்திரம் அனுப்பவேண்டும்.

சி. குமாரசுவாமி,
பதிவுகாரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு வைகாசிமீ 30 ௳ திகதி.

---

சுட்டிய அட்டவணை.

பரீட்சைக்குரிய கல்வி விஷயங்களும் (மாக்ஸ்) புள்ளிகளும்.

| | | ஆகக்கூடிய தொகை |
|---|---|---|
| கணிதம் | .. .. | 100 |
| வாசகஞ்சொல்ல எழுதுதல் | எழுத்து இலட்சணம் | 50 |
| | எழுத்துக்கூட்டுதல் | 50 |
| முகவுரை வாக்கியம் ஒன்று கொடுக்க அதைப் பீடிகையாக்கி வசனந் தொடுத்தல் .. | .. | 50 |
| வாசினை .. | .. .. | 50 |
| இலக்கணம் .. | .. .. | 100 |

நேரசூசிகை.

மார்கழி 5
- முற்பகல் 9 தொடக்கம் 11 மணி வரைக்கும் கணிதம் (சிங்கள தமிழ்ப் பாஷைகளில்)
- முற்பகல் 11 தொடக்கம் 11.30 மணி வரைக்கும் வாசகஞ்சொல்ல எழுதுதல் (சிங்கள தமிழ்ப் பாஷைகளில்)
- பிற்பகல் 12.45 தொடக்கம் 1.45 மணி வரைக்கும் வாசகந்தொடுத்தல் (சிங்கள தமிழ்ப் பாஷைகளில்;
- பிற்பகல் 2 தொடக்கம் 3.30 மணி வரைக்கும் இலக்கனம் (சிங்கள தமிழ்ப் பாஷைகளில்)

அடுத்த நாட்களில் வாசினை (சிங்கள தமிழ்ப் பாஷைகளில்)

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்கள்.

இத்தாற் சகலரு மறியவும் 3,500 அந்தர் உப்பு கரையூரிலிருந்து முல்லைத்தீவுக்கு 1932 ம் ஆண்டு ஆடி மாசம் நடுப்பகுதியில் அவ்விடஞ் சேரத்தக்கதாக ஏற்றிக்கொண்டு போய்க்கொடுக்க விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரைவைத்து மேல்விலாசமிட்டிருக்க வேண்டும்.

(a) மூலப்பிரதியில் வடமாகாணம் கவுண்மேந்து ஏசென்றுவுக்கு மேல்விலாசம் எழுதுக.

(b) இணைப்பிரதியில் கொழும்பு உப்பு ஆலோசனை காரியஸ்தருக்கு என்று மேல்விலாசமெழுதுக.

3. "உப்பு ஏற்றக் கேட்கும் கேள்விப்பத்திர" மென்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுத வேண்டும். 1932 ம் ஞூ ஆனி மாதம் 21 ௳ திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்குமுன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரிலும் உப்பு ஆலோசனை காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேண்டும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப் முதலெழுத்துக்களிடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் எந்தக் கச்சேரியிலாவது ரூபா 50 கட்டிப் பற்றிச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப் பத்து நாளைக்குள்ளாகப் போதியபிணை கொடுக்கத் தவறினால் அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். அப்படித்தவறியவர்களின் பெயர் கவுண்மேந்துக் கொந்திறுத்துக் கொடுக்கப்படாதென்று தள்ளப்பட்டவர்களுடைய பெயர் பதியப்படும் இடாப்பிலும் சேர்க்கப்படும் ஒப்பந்தம் நிறைவேற்றியவுடன் கட்டிய காசு முதலியவை திரும்பிக் கொடுக்கப்படும்.

6 ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணைநிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனைத்திருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தில் ஒரு அந்தருக்கு ஏற்றுமதி கூலி எவ்வளவென்று குறிக்கவேண்டும். நூற்றுக்கு மூன்று வீதத்துக்கு மேற்படாமல் சேதத்துக்குக் கழிவு விடப்படும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தச்சட்டங்களும் மற்றுங் காரியங்களும் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

9. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பாதம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடை நொத்தீசு கொடுட்பின் அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

10. மேற்சொல்லியவைகளுக்கேட்க எழுதப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவண்மேந்துக்குண்டு.

ஏ. ரீ. டைசன்,
கவண்மேந்து ஏசன்று.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1932 ம் ஆண்டு வைகாசிமீ 31 ௳ திகதி.

---

இத்தா லறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுறச் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகைகளை 1932 ம் ஆண்டு ஆனிமாதம் 14 ௳ திகதி, தொடக்கம் புரட்டாதிமாதம் 30 ௳ திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1932 ம் ஆண்டு ஆனிமாதம் 13 ௳ திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

காரைத்தீவு.

பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். தபால் வழியாய் அனுப்பப்பட்டவையுங் குறித்த நேரம் தேதியின் பின் கிடைப்பவையுங் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கோள்வித்தொகையில் மூன்றிலொருபங்கு பிணையேனுங் கட்டவேண்டும்.

கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாக்க கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணையுறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கபட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பி. மோட்டிமர்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1932 ம் ஆண்டு வைகாசிமீ 31 ௳ உ.

## டிஸ்திறிக் ரேட் கோம்மிற்றி அங்கத்தவரைத் தெரிவு செய்தல்.

### நுவரக்களாவி பகுதி டிஸ்திறிக் ரேட் கொம்மிற்றி அங்கத்தவர் தெரிவு.

இத்தால் அறிவிக்கிறது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1932 ம் ஆண்டின் பிற் பகுதிக்கும் 1933 ம் 1934 ம் ஆண்டுகளுக்கு நுவரகளாவி டிஸ்திறிக் ரேட் கொம்மிற்றியின் அங்கத்தவராயிருந்து தனது நியமனத்திலிருந்து நீங்கிய பிரசித்த நொத்தாரிசு, டி. எஸ். ஆறுமுகம் அவர்களுக்குப் பதிலாக அங்கத்தவராக வரவிரும்புவோர் தங்கள் எண்ணத்தைத் தெரிவு நாளுக்கும் பத்து நாட்களுக்கு முன்பாக வடமத்திய மாகாணப் பிறவின்சல் ரேட் கம்மிற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்திலறிவிக்க வேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தின் 35 ம் பிரிவின்படி நுவரக்களாவி டிஸ்திறிக் ரேட் கொம்மிற்றிக்கு ஓர் அங்கத்தவரை 1932 ம் ஆண்டு ஆனி மாதம் 30 ௳ திகதி பிற்பகல் 2 மணிக்கு அநுராசபுரக் கச்சேரியில் தெரிவு செய்யப்படும்.

சி. எல். விக்கிரமசிங்க,
பிறவின்சியல் ரேட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறவின்சியல் ரேட் கொம்மிறறிக் கந்தோர்,
அநுராசபுரம், 1932 ம் ஆண்டு வைகாசி மாசம் 28 ௳ திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.